**தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 29 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தீயோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,691.35 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3,194.57 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 496.78 மில்லியன் அதாவது 13.46 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 2,589.35 | 2,302.46 | 286.89 | 11.08 |
| மூலதன | 1,102.00 | 892.11 | 209.89 | 19.05 |
| மொத்தம் | 3,691.35 | 3,194.57 | 496.78 | 13.46 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19.06 | 18.82 | 12.06 | 18.75 | 50.00 | 36.88 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0300/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 79.47 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 06 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.55 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0105/000 | 0.33 |
| 6000/0000/00/0002/0145/000 | 0.35 |
| 6000/0000/00/0013/0100/000 | 1.67 |
| 6000/0000/00/0016/0091/000 | 5.00 |
| 6000/0000/00/0018/0095/000 | 0.20 |
| மொத்தம் | 7.55 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | விடுமுறை தொடர்பான பதிவேடு | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

29301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,189,542 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைக் கடன் மீதிகள் 06 மாதம் முதல் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் திணைக்களத்திற்கு வெளியே பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 115,103 நிலுவைக் கடன் மீதிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 107,010 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | லொறி வண்டி | 01 | 550,000 | 03 வருடங்கள் |
| (ii) | ஜீப் வண்டி | 01 | 400,000 | 08 மாதங்கள் |
| (iii) | முச்சக்கர வண்டி | 01 | 299,975 | 10 மாதங்கள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் இரண்டு பிரதேச அலுவலகங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வுச் சபையின் அறிக்கைகளிலிருந்து சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் நாகொடை, இங்கிரிய மற்றும் புளத்சிங்ஹல உத்தியோகபூர்வ இல்லங்களில் பொருத்தப்பட்டிருந்த 12 மின் விசிறிகள், 08 றெகுலேட்டர்கள் மற்றும் 02 தண்ணீர் தாங்கிகள் (500 L) பொருட்பதிவேட்டில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தெஹியோவிட்ட பிரிவில் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 04 உத்தியோகபூர்வ விடுதிகளைத் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் கழற்றி அகற்றப்பட்ட பொருட்கள் 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களின் போது உரிய வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

(iv) கம்புறுப்பிட்டி மற்றும் எல்பிட்டிய இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களில் காணப்படுகின்ற 04 மேசைகள், 04 பிடியுடனான 04 கதிரைகள், 06 பிளாஸ்டிக் கதிரைகள், சாதாரண கதிரைகள், 04 குஷன் கதிரைகள் மற்றும் இரண்டு இலாச்சுடன் 01 அலுமாரி என்பன பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமை பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(v) ஏகல் ஓயா நாற்றுமேடையின் பழைய கட்டிடங்களிலிருந்து கழற்றி அகற்றப்பட்ட பெறுமதியுடைய கூரை ஓடுகள் மற்றும் மரக்குற்றிகள் குவித்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவை நாளுக்குநாள் துருப்பிடித்துக் கொண்டிருப்பதாகவும், மெய்மையாய்வுச் சபை அறிக்கையிட்டிருந்தது.

(vi) குருகொட இறப்பர் நாற்றுமேடையில் காணப்படுகின்ற கெப் வண்டியும் அங்குள்ள நீர்க்குழாய் முறைமை பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தமையும் மெய்மையாய்வுச் சபை அறிக்கையிட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதுள்ள ஒரு வருட காலத்திற்கு குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்கள் ரூபா 76,838,381 ஆகும்.

### 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான 07 இறப்பர் நாற்று மேடைகளிலிருந்து மீளாய்வாண்டின் போது 1,850,000 இறப்பர் நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் 1386593 இறப்பர் கன்றுகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இறப்பர் நாற்று உற்பத்தியின் போது, இலக்கிடப்பட்ட இறப்பர் நாற்றின் அளவினைவிட 25 சதவீதம் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போத அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 8.4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தமையினால் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் 2016 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 11015 ஹெக்டேயர் புதிதாக இறப்பர் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் 1160 ஹெக்டேயர் அதாவது 100 சதவீத அளவில் இறப்பர் பயிரிடப்பட்டிருந்தது.

### 3.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகளின் பெறுமதி ரூபா 1,731,388 ஆக இருந்தது. அந்தக் காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது

(அ) இறப்பர் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 329 மில்லியன் இறப்பர் உத்தரவாத விலை மானியம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 11.5 மில்லியன் பிழையான கொடுப்பனவாக இருந்தமையால் அதனை அறவிட வேண்டுமென குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்தத் தொகையை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உத்தரவாத விலை செலுத்தும் முறைமையின் கீழ் 2015 சனவரி 30 ஆந் திகதிய 2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 50 ஏக்கருக்கு குறைவான இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களுக்கு மாத்திரம் இதற்காக உரித்து பெறமுடியுமான போதிலும் 06 சந்தர்ப்பங்களின் போது 50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணி உரிமையாயளர்களுக்கு ரூபா 2,031,252 தொகை உத்தரவாத விலையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வியாபார முகவர்கள் சமர்ப்பித்த RC 14 அறிக்கையின் பிரகாரம் 04 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக 856.5 கிலோ வழங்கியதாகக் காண்பித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக அவ்வாறான வழங்கலொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) உரித்துறுதிச் சான்றிதழ் இலக்கம் RPS/1/32/12 இன் கீழ் போலியாக பட்டியல் சமர்ப்பித்து ரூபா 75,786 இறப்பர் மானியமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் மற்றும் 2015 சனவரி காலப்பகுதியில் இரண்டு முகவர் நிறுவனங்களினால் தாங்கள் கொள்வனவு செய்த இறப்பர் அளவினைவிட கூடுதலாக இன்னுமொரு நிறுவனத்திற்கு இறப்பர் வழங்கியதாகக் குறிப்பிட்டு ரூபா 3,253,122 இறப்பர் மானியம் மேலதிகமாகச் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 17 இறப்பர் பயிர்ச் செய்கையாளர்களினால் வழங்கப்பட்ட 79529 கிலோ இறப்பர் இற்குரிய RC 14 அறிக்கை இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் கேகாலை பிரதேசத்திற்கு அனுப்பப்படாதிருந்ததுடன் இந்த இறப்பர் அளவு எந்த பயிர்ச்செய்கையாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அளவு என உறுதிப்படுத்தப்படால் ரூபா 7,555,302 உத்தரவாத விலை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இறப்பர் முகவரின் RC 14 அறிக்கையின் பிரகாரம் இறப்பர் வழங்குனரினால் இறப்பர் 2463 கிலோ விற்பனை செய்யப்பட்டிருந்தது. வழங்குனரின் RC 14 அறிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 20 இல் உள்ளவாறு பின்னர் அவர் 576 கிலோ இறப்பரே கொள்வனவு செய்திருந்தார். அதன் பிரகாரம் உரிய கால எல்லைக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 1887 கிலோவிற்காக ரூபா 179,265 இறப்பர் மானியம் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2015 சனவரி மாதத்தின் போது 03 உறுதிச்சீட்டுக்கள் மூலம் செலுத்தப்பட்ட ரூபா 136,237,660 தொகை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) களுத்துறை மாவட்டத்தில் இறப்பர் மானியம் செலுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது மூன்றாவது முறைமையின் கீழ் இறப்பர் பயிர்ச் செய்கையாளருக்கு அவருக்கு சேகரிக்கும் ஆகக்கூடிய கிலோ அளவினைவிட 970 கிலோவிற்காக ரூபா 291,000 உத்தரவாத விலையாக வழங்கப்பட்டிருந்தது. இரண்டாவது முறைமையின் கீழ் உத்தரவாத விலைக்காக உரித்தான சேகரிக்கும் ஆகக்கூடிய இறப்பர் அளவினைவிட கூடுதலான அளவில் உத்தரவாத விலை செலுத்தப்பட்டமையின் காரணமாக 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 731,272 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) நாற்றுக்களைக் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறி வண்டிகளின் மீற்றர் மானி உரிய பிரகாரம் செயற்படுத்த வேண்டியமை அறிவுரை பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மீற்றர் மானி செயற்படுத்தப்படாத 03 லொறி வண்டிகளுக்கு ரூபா 1,054,593 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இறப்பர் கொள்வனவு செய்யப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கிடையே உரித்துறுதிச் சான்றிதழ் இன்றிய 16 பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 1,208.5 கிலோ இற்காக உத்தரவாத விலையாக ரூபா 97,707 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இறப்பர் வழங்கிய 07 பயிர்ச் செய்கையாளர்களிடமிருந்து அவர்களின் ஆகக்கூடிய உரித்தை விஞ்சி இறப்பர் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 58,757 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 திசெம்பர் 17 ஆந் திகதிய RDD/3/2/Poly/2014-2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 05 நாற்றுமேடைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 440,000 பொலித்தீன் உறைகள் ரூபா 20,383,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் பின்னர் அந்த பொலித்தீன் தொடர்பாக இரண்டாவது தடவை மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 04 நாற்றுமேடைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,375,750 பெறுமதியான 3,025,000 பொலித்தீன் உறைகளை வழங்குவதற்காக குறிப்பிட்ட காலத்தைவிட 02 மாதங்கள் முதல் 03 மாதங்கள் வரையிலான கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

### 3.8 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேகாலை பிரதேச அலுவலகத்தின் கணனி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பரீட்சித்த போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 205,551 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய உத்தரவாத விலை செலுத்தும் போது, RC 14 அறிக்கையின் மூலம் உரிய தகவல்கள் உறுதிப்படுத்தப்படாமல் 03 நிறுவனங்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 7,443,769 தொகை மேலதிகமாகச் செுலுத்தப்பட்டிருந்தது.

(இ) இறப்பர் போக்குவரத்திற்குரிய கொள்வனவுக் குழு தீர்மானத்தின் பிரகாரம் 190598 நாற்றுக்களை போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 2,051,745 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துூர அளவினைவிட 2310 கிலோ மீற்றருக்காக ரூபா 321,090 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 25 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 03 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 364 | 310 | 54 |
| (iv) | ஆரம்ப நிலை | 72 | 69 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 15 | 15 | - |
| | **மொத்தம்** | **497** | **422** | **75** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 75 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்த போதும், அந்த சேமிப்புத் தொடர்பில் பதவியணியினர் வெற்றிடமாகக் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.